بسم الله الرحمن الرحيم　نحمده ونصلي على رسوله الكريم　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 17

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

29 ஷஃபான் 1441 ஹிஜ்ரி கமரி 23 ஷஹாதத் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

23 ஏப்ரல் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَآ اِنَّكَ مَنْ تُدْخِلِ
النَّارَ فَقَدْ اَخْزَيْتَهٗ ؕ
وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ ۝١٩٣

எங்கள் இறைவா! நீ நெருப்பில் நுழையச் செய்தவரை நிச்சயமாக இழிவுப்படுத்தி விட்டாய். மேலும் அநீதி இழைப்பவர்களுக்கு உதவி செய்பவர் எவரும் இல்லை. (3:193)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால் அவை முன்மாதிரி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் முழுமையான தரத்துடன் நிரூபணமாகியது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றிலிருந்து...

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் நல்லொழுக்கம்

அவர்கள் சஹாபாக்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் முஸ்லிம் பெண்களுக்கும் கடுமையிலும் கடுமையான துன்புறுத்தலையும் கஷ்டங்களையும் வழங்கியிருந்தார்கள். அவர் எதிரே வந்தபோது அன்னார் கூறினார்கள்: லா தஸ்ரீப அலைக்குமுல் யவ்ம – நான் இன்று உங்களை மன்னித்து விட்டேன். இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைத்திருக்காவிட்டால் இப்படிப்பட்ட அன்னாரின் உயர்வான அக்லாக் எவ்வாறு வெளிப்பட்டிருக்கும்? அன்னாரின் இந்த மகிமை அன்னாருக்கு மட்டுமே உரித்தானதாக இருந்தது. அன்னாரிடம் இல்லாத ஏதேனும் நல்லொழுக்கத்தை, அது உயர் தரத்தையும் முழுமையானதாகவும் இல்லாமல் இருந்ததைக் கூறமுடியுமா?

ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் வாழ்க்கையைப் பார்த்து கூறவேண்டியுள்ளது, அன்னாரின் நல்லொழுக்கம் முற்றிலும் மறைவாகவே இருந்து விட்டது. தீய யூதர்கள்; அவர்களுக்கு அரசாங்கத்திடம் இருக்கைகள் கிடைத்து வந்தன. ரோமானிய அரசு அந்த கூட்டத்தினரின் (பெரும்பான்மையின்) காரணமாக மதிப்பளித்து வந்தது. ஈசாவை துன்புறுத்தி வந்தனர். ஆனால் நிலையை வெளிப்படுத்திக் காட்டும் எந்தவொரு சந்தர்ப்பமும் ஹஸ்ரத் ஈசாவின் வாழ்க்கையில், அவர்கள் எதுவரை பழிதீர்த்துக் கொள்ளும் நிலையில் இருந்துகொண்டு மன்னிப்பு வழங்கினார்கள் என தெரிந்துகொள்ளும்படி வரவில்லை.

ஆனால் இதற்கு நேர்மறையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால் அவை முன்மாதிரி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் முழுமையான தரத்துடன் நிரூபணமாகியது. அவை வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல மாறாக அவற்றின் உண்மைத்துவத்தின் சான்று நமது கைகளில் எப்படிப்பட்டதாக உள்ளது என்றால் கணிதம் மற்றும் எண்ணிக்கையின் அடிப்படை சரியாகவும் நம்பக்கூடியதாகவும் இருப்பதைப்போன்று இருக்கின்றது. இரண்டும் இரண்டும் நான்கு என்பதைப்போன்று நாம் அவற்றை நிரூபித்துக்காட்ட முடியும். ஆனால் பிற நபிமார்களைப் பின்பற்றக்கூடியவர்களால் இவ்வாறு செய்யமுடியாது.

எனவேதான் அன்னாரின் உதாரணம் இப்படிப்பட்ட ஒரு மரத்தின் மூலம் விளக்கிக் கூறப்பட்டது. அதன் வேர், பட்டை, பழம், மலர், இலை போன்ற ஒவ்வொரு பொருளும் பயனளிக்கக்கூடியதும் உயர்தர நன்மையானதும் நிம்மதியளிக்கக்கூடியதும் இன்பத்தைத் தரக்கூடியதமாகும். ஏனென்றால் என்றென்றும் வாழ்பவராகிய அகிலத்தின் தலைவர் அவர்களுக்குப் பிறகு உம்மத்தில் ஒரு பிளவு தோன்றியது. எனவே அந்த ஒன்றுபட்ட அக்லாக்கும் இருக்கவில்லை. மாறாக தனித்தனியாக வெவ்வேறாக அந்த ஒருமித்த அக்லாக் பரவிவிட்டது. எனவே சிலர் சில அக்லாக்கை எளிதாக மேற்கொள்ள முடியும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 115,116 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### காதியான் தாருல் அமானில் தேசிய இஜ்திமாக்களுக்கான தேதி அறிவிப்பு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் இந்தியாவின் கிளை அமைப்புகளின் (மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ்) தேசிய இஜ்திமாக்களை 16,17,18 அக்டோபர் 2020 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள்.

கிளை அமைப்பின் உறுப்பினர்கள் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறும் இந்த இஜ்திமாக்களில் பங்கு பெற இப்போதிருந்தே தயாராகுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம். இந்த இஜ்திமாக்கள் தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த வழியாக இருக்கின்றது.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

நேர்மையை நேசிப்போம்
நேர்மையின்மையை வெறுப்போம்


நேர்மையை நேசிப்போம்
நேர்மையின்மையை வெறுப்போம்



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ் என்னிடம் கம்பீரமான வார்த்தைகளில் கூறினான். உலகில் ஒரு எச்சரிப்பாளர் வந்தார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஏற்பான். பெரும் வல்லமைமிக்க தாக்குதல்கள் மூலம் அவரது உண்மையை வெளிப்படுத்துவான்**

**எந்த வேலைக்காக இறைவன் என்னை நியமித்துள்ளானோ அது, இறைவனுக்கும் அவனது படைப்பினங்களுக்கும் இடையில் ஏற்பட்ட தொய்வை அகற்றி அதனை அன்பு, நேசம், கலப்பின்மை ஆகியவற்றை நிரப்புவதாகும். உண்மையை வெளிப்படுத்தி மார்க்கச் சண்டைகளை அகற்றி சமாதானத்தின் அடிப்படையை ஏற்படுத்துவதும் ஆகும். உலகின் பார்வையில் இருந்து மறைந்து விட்ட மார்க்க உண்மைகளை வெளிப்படுத்திக் காட்டுவதாகும். மன இருள்களில் மறைந்து விட்ட ஆன்மீகத்திற்கு முன்மாதிரி காட்டுவதுமாகும். மேலும் இறை ஆற்றல்கள் மனிதனிடம் நுழைந்து கவனம் மற்றும் வேண்டுதல் மூலம் வெளிப்படுகின்றன. அதனை சொல் அளவில் அல்லாமல் செயலளவில் வெளிப்படுத்திக் காட்டுவதற்காக ஆகும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒளிவீசும் ஏகத்துவமாகிய எல்லா வித இணைவைப்பிலிருந்து விலகியதும், இப்போது மறைந்து போய் விட்டதுமானதை மீண்டும் சமுதாயத்தில் நிலைநாட்டுவதும் ஆகும்**

**நான் இறைவன் புறமிருந்து வந்தது முஸ்லிம்களின் சீர்திருத்தத்திற்காக மட்டுமல்ல. மாறாக, முஸ்லிம்கள், இந்துக்கள், கிறித்தவர்கள் ஆகிய மூன்று சமுதாயங்களின் சீர்திருத்தமும் நோக்கமாகும். இறைவன் என்னை முஸ்லிம்கள் மற்றும் கிறித்தவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக ஆக்கியதுபோன்று இந்துக்களுக்கு ராஜா கிருஷ்ணராகவும் வந்துள்ளேன். நான் உலகில் நிறைந்துள்ள பாவத்தை அகற்றுவதற்காக மஸீஹிப்னு மர்யமாகவும் இருக்கிறேன். எவ்வாறு மஸீஹிப்னு மர்யமாக இருக்கிறேனோ அதேபோன்று ராஜா கிருஷ்ணராகவும் இருக்கிறேன்**

**உலகத்தில் பரவி வருகின்ற கொரோனா வைரஸ் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகள் மற்றும் துஆவின் பக்கம் கவனம் செலுத்துமாறு ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 மார்ச் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **20 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

மூன்று நாட்களுக்குப் பிறகு 23 மார்ச் வருகிறது. அந்த நாளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத்தை தொடங்கினார்கள். அவர்களின் மஸீஹ் மவ்வூது என்ற வாதத்துடன் முறைப்படி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது. ஜமாஅத்தில் இந்த நாள் மஸீஹ் மவ்வூது தினமாகக் கொண்டாடப்படுகிறது. அதன் அடிப்படையில் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதம் மற்றும் வருகையின் நோக்கம் அப்போது எடுத்து வைக்கப்படுகிறது. இன்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளில் அன்னாரின் மேற்கோள்களை எடுத்து வைப்பேன்.

இவ்வருடம் பெரும்பாலான நாடுகளிலும் இடங்களிலும் வைரஸ் தொற்று நோய் பரவியுள்ளதால் கூட்டம் நடத்த முடியாமல் உள்ளது. எனவே எனது குத்பாவுடன் M.T.A –விலும் நிகழ்ச்சிகள் நடத்தப்படும். அதனை ஒவ்வோர் அஹ்மதியும் வீட்டில் இருந்தவாறு பிள்ளைகளுடன் கேட்க முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடிமை என்ற முறையில் அன்னாரின் பணியையும் அன்னாரின் மார்க்கத்தையும் உலகில் பரப்புவதற்காக வந்திருந்தார்கள்.

இதைப் பற்றி அன்னார் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது அனுப்புகிறேன். அன்னாருக்காகவே இந்த இயக்கத்தை உருவாக்கினான். அன்னாரின் அருள் மற்றும் பரக்கத்தின் விளைவால்தான் இந்த உதவிகள் கிடைக்கின்றன.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் திறந்து கூறுகிறேன். இதுவே எனது கொள்கையும் வழியும் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுதல் மற்றும் வழிநடத்தல் இல்லாமல் எந்த மனிதனும் எந்த ஆன்மீக அருளையும் பெற முடியாது.

(லெக்சர் லூதியானா, ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 267)

அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து ஆன்மீக அருளைப் பெற்றார்கள். இதனால் அல்லாஹ் அன்னாரை உலகின் சீர்திருத்தத்திற்காக அனுப்பினான். இஸ்லாத்தின் மகிமையை உலகில் நிறுவுவதற்காக அனுப்பினான்.

இந்த வகையில் அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

வர்ஸுல்னி ரப்பி பி இஸ்லாஹில் கல்கி – படைப்பினங்களைச் சீர்திருத்துவதற்காக இறைவன் என்னை அனுப்பினான்.

பிறகு தமது தோற்றம் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இதனை மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பேன். இதனை வெளிப்படுத்துவதை நிறுத்த இயலாது. நான் படைப்பினங்களைச் சீர்திருத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் மார்க்கத்தைப் புத்துணர்வுடன் மீண்டும் உள்ளத்தில் நிலைநாட்டவும், கலீமுல்லாஹ் – இறை மனிதன் அனுப்பப்பட்டது போன்று அனுப்பப்பட்டுள்ளேன். அவரது ஆன்மா ஹெருடைஸ் ஆட்சியில் பெரும் கஷ்டத்திற்குப் பிறகு வானத்தின் பக்கம் உயர்த்தப்பட்டது.

(ஃபதஹ் இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 7,8)

மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வருகை பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய முன்னறிவிப்பு குறித்த நேரத்தில் நிறைவேறியது பற்றி குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்:

எனது சகோதரர்களே! இறைவனுக்காக நீங்கள் சோர்வோ அலுப்போ அடையாமல் இருங்கள். நான் இதனைக் கூறுவது அவசியமாக இருந்தது. அதனைப் புரிவதில் உங்களுக்கு தவறு ஏற்பட்டுள்ளது. நீங்கள் முதலிலேயே நேர்வழியில் இருந்தால் நான் வர வேண்டிய அவசியம் என்ன? நான் கூறி விட்டேன். நான் இந்த உம்மத்தின் சீர்திருத்தத்திற்காக இப்னு மர்யமாக வந்துள்ளேன். இந்த வகையில் நான் அவருக்கு ஒப்பானவன் ஆவேன். ஹஸ்ரத் மஸீஹிப்னு மர்யம் எவ்வாறு யூதர்களை சீர்திருத்துவதற்காக வந்தாரோ அதனைப் போன்று நான் மஸீஹ் ஆக இருக்கிறேன். யூதர்களிடம் ஏற்பட்ட பெரும்பாலான தவறுகளைச் சீர்திருத்தி இரட்சிக்க வந்தார்.

அவர்களின் தவறுகளில் ஒன்று, யூதர்கள் எலியா நபி மீண்டும் வர வேண்டும் என்று நம்பியிருந்தனர். எவ்வாறு மஸீஹிப்னு மர்யம் ரஸூலுல்லாஹ் மீண்டும் வருவார் என்று எதிர்பார்த்திருக்கிறார்களோ அதுபோன்று எதிர்பார்த்திருந்தார்கள். எலியா நபி வானத்திலிருந்து இறங்க முடியாது. ஸக்கரியாவின் மகன் எஹ்யா தான் எலியா ஆவார். நீங்கள் ஏற்றுக் கொள்வதாயின் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியவாறு பழைய தவறுகளைக் களைந்தார். யூதர்களின் நாவினால் பல வசைமொழிகளால் நூல்கள் நிறைந்து காணப்பட்டன. அன்னார் உண்மையை வெளிப்படுத்திக் காட்டினார்கள். இதே பணிதான் அன்னாரைப் போன்று வந்தவருக்கும் இருந்தது. அவரையும் வசைமாரிப் பொழிந்தனர். இது உயர்தரமான ஒப்புமையாகும்.

(இஸாலா அவ்ஹாம் பாகம் 2, ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 394)

பெரும்பாலான முஸ்லிம்களுக்காக மட்டுமின்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒவ்வொரு சமுதாயம் மற்றும் மக்களுக்காகவும் தமது தோற்றத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார்கள்.

இந்த வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தெளிவாக விளங்கிக் கொள்ளுங்கள். நான் இறைவன் புறமிருந்து வந்தது முஸ்லிம்களின் சீர்திருத்தத்திற்காக மட்டுமல்ல. மாறாக, முஸ்லிம்கள், இந்துக்கள், கிறித்தவர்கள் ஆகிய மூன்று சமுதாயங்களின் சீர்திருத்தமும் நோக்கமாகும். இறைவன் என்னை முஸ்லிம்கள் மற்றும் கிறித்தவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக ஆக்கியதுபோன்று இந்துக்களுக்கு ராஜா கிருஷ்ணராகவும் வந்துள்ளேன். நான் உலகில் நிறைந்துள்ள பாவத்தை அகற்றுவதற்காக மஸீஹிப்னு மர்யமாகவும் இருக்கிறேன். எவ்வாறு மஸீஹிப்னு மர்யமாக இருக்கிறேனோ அதேபோன்று ராஜா கிருஷ்ணராகவும் இருக்கிறேன். அவர் இந்துக்களின் அவதாரங்களின் பெரும் அவதாரமாக இருந்தார்.

இன்னும் சொல்வதாயின், ஆன்மீக உண்மையின்படி பார்ப்பதாயின் நான் அவராகவே இருக்கிறேன். எனது எண்ணம் சிந்தனையால் கூறவில்லை. மாறாக, வானங்கள், பூமியின் இறைவன் என் மீது இதனை வெளிப்படுத்தினான். அதனை ஒருமுறையல்ல. மாறாக பலமுறை கூறியுள்ளான். நீ இந்துக்களுக்காக கிருஷ்ணன் என்றும் முஸ்லிம்கள் மற்றும் கிறித்தவர்களுக்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவீர் என்றும் கூறினான்.

நான் அறிவேன். அறிவற்றவராக இருக்கும் முஸ்லிம் இதனைக் கேட்டவுடன் இவர் காஃபிரின் பெயரைத் தனக்குதானே சூட்டிக் கொண்டு தெளிவாக காஃபிர் ஆகிவிட்டார் என்று கூறுவார். ஆனால் இது இறைவனின் வஹி ஆகும். என்னால் வெளிப்படுத்தாமல் இருக்கவே முடியாது. இது பெரும் கூட்டத்தில் இதனை எடுத்து வைக்கும் முதல் நாள் ஆகும். எவர் இறைவனுக்காக ஆகி விட்டாரோ அவர் பழிகூறுபவரின் பழிச்சொல்லுக்கு அஞ்சுவதில்லை.

(லெக்சர் சியால்கோட், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 7,8)

இதனை அன்னார் லெக்சர் ஸியால்கோட்டில் கூறியுள்ளார்கள். இந்த சொற்பொழிவை அன்னார் இந்து முஸ்லிம்கள் அடங்கிய பெருங்கூட்டத்தில் நிகழ்த்தினார்கள்.

பிறகு அன்னார் தமது தோற்றத்தின் முக்கியத்துவத்தை விளக்கியவாறு கூறுகிறார்கள்:

மனிதன் அல்லாஹ்வின் கட்டளையை எதிர்க்கும்போது பாவங்களைப் பெறுபவன் ஆகிறான். ஒரு சாதாரண இராணுவ வீரன் அரசின் கடிதத்தை எடுத்துக் கொண்டு வரும்போது அதனை ஏற்காதவர் குற்றவாளியாகக் கருதப்படுகிறார். தண்டனை பெறுகிறார். நிழலான ஆட்சியாளரின் நிலை இதுவெனில் அஹ்கமுல் ஹாகிமீன் – ஆட்சியாளர்களுக்கெல்லாம் ஆட்சியாளன்) உடைய கட்டளையை கண்ணியக்குறைவு மரியாதைக் குறைவு செய்வது அல்லாஹ்வுக்கு செய்யும் எத்தகைய மாறுபாடு ஆகும்? இறைவன் தன்மானம் உள்ளவன். அவன் சூழ்நிலைக்கேற்ப தேவையின் வேளையில் வழிதவறிய நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு மனிதனை அனுப்பினான். அவர் மக்களை நேர்வழியின் பக்கம் அழைப்பதற்காக அனுப்பினான். அவரது சீர்திருத்த முயற்சிகளைக் காலின் கீழ் இட்டு நசுக்குவது பெரும் பாவமாகும்.

அன்னார் கூறுகிறார்கள்: இறைவனது நாட்டம் இன்றி மனிதனுக்கு அறிவு கிடைக்கவே முடியாது. மனிதன் தன்னை இறை நாட்டத்தை விட மேலாக கருதுவதற்கு அவன் என்ன பெரிய பொருளா? இறைவனது நாட்டமும் விளைவும் இப்போதும் தெளிவாகவும் விரைவாகவும் வந்துள்ளது. ஒரு காலம் இருந்தது. அப்போது இஸ்லாத்தில் ஒரு மனிதன் முர்தத் ஆகி விட்டால் அன்னார் அக்காலம் பற்றி கூறுகிறார்கள். பெரும் பூகம்பம் ஏற்பட்டு விடும். இப்போது இஸ்லாம் காலின் கீழ் இட்டு நசுக்கப்படுகிறது. ஒரு இலட்சம் முர்தத்துகள் உள்ளனர்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: இஸ்லாம் போன்ற ஒரு புனிதமாக்கப்பட்ட தூய்மையாக்கப்பட்ட மார்க்கத்தின் மீது இவ்வளவு தாக்குதல் தொடுக்கப்படுகிறது. ஆயிரம் இலட்சம் நூல்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை வசைமாரிப் பொழிந்து நிறைய வெளியிடப்படுகின்றது. நூல்கள் பல கோடி பிரதிகள் அடிக்கப்படுகின்றன. இஸ்லாத்திற்கு எதிராக என்னவெல்லாம்

## திருக்குர்ஆனிலிருந்து...

உம்முடைய இறைவனின் வாக்கு மெய்யாகவும், நீதமாகவும் நிறைவேறிவிட்டது. (ஏனென்றால்) அவனது வார்த்தைகளை எவராலும் மாற்ற இயலாது. மேலும் அவன் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (6:116)

Faizal Hameed Ilahi, Tittacherry

வெளியிடப்படுகிறதோ அனைத்தையும் ஓரிடத்தில் ஒன்று கூட்டினால் அது ஒரு மலையாகி விடும். முஸ்லிம்களின் நிலை இதுவாகும். அவர்களிடம் உயிர் இல்லை. அனைவரும் இறந்து விட்டனர். இப்போது இறைவனும் அமைதியாக இருந்து விட்டால் பிறகு என்ன நிலை உருவாகும்? இறைவனது ஒரு தாக்குதல் மனிதனின் ஆயிரம் தாக்குதல்களை விடப் பெரியது. அதனால் மார்க்கம் உயர்நிலையை அடையும்.

கிறித்தவர்கள் 19 நூற்றாண்டுகளாகக் கூச்சலிடுகின்றனர். ஈஸா இறைவன் என்கிறார்கள். அவர்களின் மார்க்கம் வளர்ந்து விட்டது. முஸ்லிம்கள் இன்னும் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள். கிறித்தவர்களின் கையிலுள்ள ஒரே ஆயுதம் இதுவே ஆகும். அது மஸீஹ் உயிருடன் இருக்கிறார். உங்கள் நபி (ஸல்) இறந்து விட்டார்கள் என்பதாகும். லாஹூரில் லார்டு பிஷப் ஒரு பெருங்கூட்டத்தில் இதனை எடுத்துக் கூறுகிறார். முஸ்லிம்களால் பதில் கூற முடியவில்லை.

நமது ஜமாஅத்தின் முப்தி முஹம்மது சாதிக் சாஹிப் அங்கு இருந்தார்கள். அன்னார் எழுந்து, திருக்குர்ஆன், ஹதீஸ், வரலாறு மற்றும் இஞ்சீல் மூலமாக ஹஸ்ரத் ஈஸா இறந்து விட்டதாக நிரூபித்துக் காட்டினார்கள். நமது நபி (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள். ஏனெனில் அன்னாரின் அருளைப் பெற்றவாறு அற்புதங்களும், அசாதாரணங்களும் செய்யத்தக்கவர்கள் எப்போதும் இருந்து வந்தார்கள் என்றதும் அவர்களால் எந்தப் பதிலும் கூற முடியவில்லை.

அன்னார் கூறுகிறார்கள்: நான் ஒருமுறை லூதியானாவில் கிறித்தவர்களிடம் பிரசுரம் வழங்கினேன். உங்களுக்கும் எங்களுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. சிறிய வித்தியாசம் தான். ஈஸா இறந்து விட்டார் என்று நம்புங்கள். அவர் வானத்திற்குச் செல்லவில்லை. உங்களுக்கு இதில் என்ன கஷ்டம் உள்ளது? இதனைக் கூறியதும் அவர்கள் மிகவும் ஆடிப்போய் விட்டனர். நாங்கள் இவ்வாறு நம்பினால், ஈஸா இறந்து விட்டார் என்றும் விண்ணிற்குச் செல்லவில்லை என்றும் நம்பினால் ஒரு கிறித்தவரும் இருக்கமாட்டார் என்றார்.

பாருங்கள். இறைவன் அலீமுல் ஹகம் ஆவான். அவன் ஒரு கோணத்தை எடுத்துள்ளான். அதனால் எதிரிகள் அழிந்து விடுகிறார்கள். முஸ்லிம்கள் இவ்விஷயத்தில் ஏன் அடம்பிடிக்கிறார்கள்? ஹஸ்ரத் ஈஸா, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட பெரியவரா? என்னுடன் பகைமை இருந்தால் வரம்பு மீறாதீர்கள். இஸ்லாம் மார்க்கத்திற்கு நஷ்டம் விளையும் பணியைச் செய்யாதீர்கள். இறைவன் நஷ்டமான எந்தக் கோணத்தையும் கையாளுவதில்லை. இந்த நடைமுறையைத் தவிர வேறு எதன் மூலமும் சிலுவையை முறிக்க முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 174,175)

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எந்த வேலைக்காக இறைவன் என்னை நியமித்துள்ளானோ அது, இறைவனுக்கும் அவனது படைப்பினங்களுக்கும் இடையில் ஏற்பட்ட தொய்வை அகற்றி அதனை அன்பு, நேசம், கலப்பின்மை ஆகியவற்றை நிரப்புவதாகும். உண்மையை வெளிப்படுத்தி மார்க்கச் சண்டைகளை அகற்றி சமாதானத்தின் அடிப்படையை ஏற்படுத்துவதும் ஆகும். உலகின் பார்வையில் இருந்து மறைந்து விட்ட மார்க்க உண்மைகளை வெளிப்படுத்திக் காட்டுவதாகும். மன இருள்களில் மறைந்து விட்ட ஆன்மீகத்திற்கு முன்மாதிரி காட்டுவதுமாகும். மேலும் இறை ஆற்றல்கள் மனிதனிடம் நுழைந்து கவனம் மற்றும் வேண்டுதல் மூலம் வெளிப்படுகின்றன. அதனை சொல் அளவில் அல்லாமல் செயலளவில் வெளிப்படுத்திக் காட்டுவதற்காக ஆகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒளிவீசும் ஏகத்துவமாகிய எல்லா வித இணைவைப்பிலிருந்து விலகியதும், இப்போது மறைந்து போய் விட்டதுமானதை மீண்டும் சமுதாயத்தில் நிலைநாட்டுவதும் ஆகும். இவை அனைத்தும் எனது சக்தியால் நடக்காது. மாறாக, அந்த இறைவனின் ஆற்றலால் நடக்கும். அவன் வானங்கள் பூமியின் இறைவன் ஆவான். நான் பார்க்கிறேன்.

ஒருபுறம் இறைவன் என் மீது கவனம் செலுத்தி தனது வஹியை வழங்கி என் உள்ளத்தில் ஒரு வேகத்தை ஏற்படுத்தியுள்ளான். இத்தகைய சீர்திருத்தத்திற்கு தயார் செய்தான். மறுபுறம் அவன் உள்ளத்தையும் என் வார்த்தைகளை ஏற்பதற்குத் தகுந்ததாக ஆக்கினான். நான் பார்க்கிறேன். இறைவன் உலகில் என்னை நியமித்து அனுப்பியதிலிருந்து உலகில் ஒரு மகத்தான புரட்சி ஏற்பட்டு வருகிறது.

(லெக்சர் லாஹூர், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 180,181)

இதுவும் லெக்சர் லாஹூரின் உரையாகும். பிறகு அன்னார், அல்லாஹ் தனது ரஹ்மத்தை வெளிப்படுத்துவதற்காக தமது தேர்ந்தெடுக்கப்பட்ட சீர்திருத்தவாதியை அனுப்புகிறான் என்பதை விளக்கியவாறு கூறுகிறார்கள்:

எல்லா உலகங்களின் இறைவனின் தொன்மையான சட்டமாவது உலகில் எப்போதாவது கடுமை எல்லையைத் தொடும்போது இறை கருணை அதனை அகற்றுவதற்காக எழுகிறது. மழை இல்லாமல் வறட்சி அதிகமாகும்போது படைப்பினங்கள் அழியும் நிலை ஏற்பட்டால் கண்ணியமிக்க இறைவன் மழையை அனுப்புகிறான். சில பகுதிகளில் மக்கள் மரணித்து விடுகிறார்கள். சரிசெய்யக் கூடிய காற்று வீசுகிறது அல்லது ஈரப்பதம் ஏற்படுகிறது. ஓர் அநீதியிழைக்கும் அரசனின் ஆட்சியில் மக்கள் சிக்கும்போது ஒரு நேர்மையாளர் உருவாகி வருகிறார்.

அதுபோன்றுதான் மக்கள் இறைவனது வழியை மறந்து விடும்போது, தவ்ஹீது மற்றும் உண்மையின் விருப்பத்தை விட்டுவிடும்போது இறைவன் தன் தரப்பிலிருந்து முழுமையான வாழ்வைக் கொண்டவரை தனது வார்த்தைகளால் சிறப்பித்து ஆதமின் மக்களின் நேர்வழிக்காக அனுப்புகிறான். எந்த அளவுக்கு வழிகேடு ஏற்படுமோ அந்த அளவுக்கு சீர்திருத்தம் ஏற்படுவதற்காக இதனைச் செய்கிறான்.

இதில் அசல் உண்மை நிலை என்னவெனில், படைத்த இறைவன், நிலை நிறுத்துபவனும் அறிந்தவனும் ஆவான். அவன் உலகை நிலைநாட்டுபவன் ஆவான். படைப்பினங்களின் நிலைப்பு முழுவதும் அவனிடமே உள்ளது. தனது எந்த சிறப்பான பண்பையும் படைப்பினங்களை விட்டு அகற்றுவதில்லை. நிர்கதியாக விடுவதும்

## திருக்குர்ஆனிலிருந்து...

இவ்வுலகில் வாழ்பவர்களுள் பெரும்பாலானவர்களை நீர் பின்பற்றினால் அவர்கள் அல்லாஹ்வின் வழியிலிருந்து உம்மை (வழி) தவறச் செய்து விடுவர். அவர்கள் பின்பற்றுவது யூகங்களை அன்றி வேறில்லை. மேலும் அவர்கள் கற்பனையிலேயே மூழ்கி உள்ளனர். (6:117)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

இல்லை. மாறாக ஒவ்வொரு பண்பும் தேவையான நேரத்தில் விரைவாக வெளிப்படுகின்றது.

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 2, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 113,114 அடிக்குறிப்பு எண் 10)

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

அந்த மனிதன் மிகவும் அருளுக்குரியவரும், நற்பேறு பெற்றவரும் ஆவார். அவரது உள்ளம் தூயதாகவும் அல்லாஹ்வின் மகத்தான மற்றும் கம்பீரம் நிறைந்ததாகவும் இருக்கும்போது அவனை மற்றவரை விட முன்னுரிமை பெற்றவராக ஆக்குகிறான். என்னை எதிர்ப்பவருக்கும் எனக்குமிடையில் உள்ள தீர்ப்பு அல்லாஹ்விடம் உள்ளது. அவன் என் உள்ளத்தையும் அவர்களையும் நன்கு அறிகிறான்; பார்க்கிறான். எவரது உள்ளம் உலகின் பார்வைக்குரியது அல்லது இறைவனுக்காக உள்ளத்தில் வேதனை கொண்டிருக்கிறார் என்று அறிகிறான்.

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். உள்ளம் தூய்மை அடையாமல் ஆன்மீகம் ஒருபோதும் கிடைக்காது. உள்ளத்தில் தூய்மை உருவாகிவிட்டால் முன்னேற்றத்திற்காக சிறப்பான ஆற்றல் உருவாகிறது. பிறகு எல்லா வகை ஏற்பாடுகளும் கிடைக்கின்றன. அவர் முன்னேறுகிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாருங்கள். அவர்கள் முற்றிலும் தனியாக இருந்தார்கள். மேலும் ஆதரவற்ற நிலையில் வாதம் செய்தார்கள். يَاَيُّهَا النَّاسُ اِنِّيْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعًا **(7:159)** எந்த நண்பரோ உதவியாளரோ இல்லாத ஒரு மனிதர் இவ்வாறு வாதம் செய்ய முடியும் என்று எவர் எண்ண முடியும்? ஆகவே எவ்வளவு துயரங்கள் வந்தன? அதில் ஆயிரத்தில் ஒரு பகுதியும் நமக்கு வரவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 157,158)

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பொதுவாக உலகிற்கு போதனை செய்தவாறு கூறுகிறார்கள்: பிறகு நமது இறுதி போதனையாவது நீங்கள் உங்கள் ஈமானை அறிந்து வைத்திருங்கள். நீங்கள் தற்பெருமை கொண்டு கம்பீரமிக்க இறைவன் முன் குற்றவாளியாகி விடாதீர்கள். பாருங்கள். உங்கள் மீது எத்தகைய நிலையில் கவனம் செலுத்தினான்?

ஆகவே கவனிக்க வேண்டிய நேரமாக இருந்தது. எனவே நீங்கள் எல்லா நற்பேற்றுக்கும் வாரிசாகுங்கள். இறைவன் வானத்திலிருந்து பார்த்தான். எவருக்கு கண்ணியம் தரப்பட்டதோ அவரை காலுக்குக் கீழிட்டு நசுக்கப்படுகிறது. எந்தச் சட்டம் எல்லாவற்றையும் விட சிறந்ததோ அது ஏசப்பட்டது. அவரோ தீய செயல் செய்தவராகவும், இட்டுக்கட்டுபவராகவும் கருதப்பட்டார். அவனது கூற்றாகிய திருக்குர்ஆன் தீய வார்த்தைகளால் நினைவு கூரப்பட்டு மனித வார்த்தையாக நினைவு கூரப்பட்டது. இந்நிலையில் அவன் தனது வாக்குறுதியை நினைவில் கொண்டன். அதுவே இந்த வசனத்தில் உள்ளது. اِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ **(15:10)**

எனவே இன்று அந்த வாக்குறுதி நிறைவேறும் நாள் ஆகும். வல்லமைமிக்க தாக்குதல்கள் மூலம் இறைவன் அதனை நிரூபித்து விட்டான். அவனால் நிறுவப்பட்ட இந்த இயக்கம் அவனுடையதேயாகும். உங்கள் கண்கள் தெளிவாக திட உறுதியுடன் இறை அடையாளங்களைக் கண்டது. நீங்கள் பார்த்தீர்களா? இறைவன் உங்களுக்காக மல்யுத்த வீரனைப் போன்று பிற சமுதாயங்களுடன் சண்டையிட்டான். அவர்கள் மீது வெற்றி கண்டான். பாருங்கள். ஆத்தம் உடைய விவகாரத்திலும் மல்யுத்தம் இருந்தது. தேடுங்கள். இப்போது ஆத்தம் எங்கே? கேளுங்கள். அவன் மண்ணில் இருக்கிறான். இல்ஹாமில் கூறப்பட்ட நிபந்தனையின்படியே சில நாள் விடப்பட்டான். பிறகு இல்ஹாமில் கூறப்பட்டபடியே சில நாட்களில் பிடிக்கப்பட்டான்.

இரண்டாவது மல்யுத்தம் லேக்ராம் விவகாரமாகும். சிந்தித்துப் பாருங்கள். இந்த மல்யுத்தத்திலும் இறைவன் எவ்வாறு வெற்றி பெற்றான்? உங்கள் கண்களால் நீங்கள் கண்டீர்கள்? முன்னறிவிப்புகளில் அவனது மரணம் பற்றி கூறப்பட்ட அடையாளங்கள் அவ்வாறே வெளிப்பட்டன. இறைவனது பிடியின் அடையாளம் சமுதாயத்தின் மீது பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. நீங்கள் முன்னர் இதுபோன்று கண்டீர்களா? நீங்கள் இத்தகைய கம்பீரத்தை முதலில் வெளிப்படக் கண்டுள்ளீர்களா? எனவே முஸ்லிம்களின் சந்ததிகளே! இறைவனின் பணிகளில் அவமரியாதை செய்யாதீர்கள்.

மூன்றாவது, மல்யுத்தம் பல்சமயக் கருத்தரங்கின் விவகாரம் ஆகும். இந்த மல்யுத்தத்திலும் இறைவன் இஸ்லாத்தின் வார்த்தைகள் உயர்வுபடுத்தினான். தனது அடையாளத்தைக் காட்டினான். தனது அடியார் மீது குறித்த நேரத்திற்கு முன்னர் வெளிப்படுத்தினான். அவரது கட்டுரையே உயர்வு பெறும் என்று கூறினான். அவ்வாறே ஆக்கியும் காட்டினான். அந்தக் கட்டுரையின் வாழ்த்துக்குரிய தாக்கத்தினால் வருகை தந்தோரை வியப்பில் ஆழ்த்தினான். இது இறைவனின் பணியா? அல்லது வேறு யாருடையதுமா? அந்த மாநாட்டில் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூல் படித்துக் காட்டப்பட்டது. அதன் வெற்றி குறித்து முதலிலேயே அன்னாருக்கு அறிவித்துத் தந்தான். அன்னார் அதனை வெளிப்படுத்தியும் இருந்தார்கள். பிறகு வெளி மக்கள் அதனை தாமாகவே வெளிப்படுத்திக் காட்டினர். இது ஒரு வெற்றிக்குரிய கட்டுரை என்று அம்மக்கள் கூறினர்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: நான்காவது, மல்யுத்தம் டாக்டர் கிளார்க் உடைய வழக்கு ஆகும். இதில் மூன்று சமுதாயமும் ஆர்யர்கள், கிறித்தவர், முஸ்லிம்கள் ஒன்றுபட்டிருந்தனர். அதன் மூலம் என் மீது கொலை முயற்சியின் குற்றச்சாட்டைச் சுமத்த நினைத்தனர். இறைவன் முதலிலேயே எனக்கு அதனை வெளிப்படுத்தினான். அவர்கள் தமது எண்ணத்தில் தோற்று விடுவர் என்றான். 200 பேருக்கு இந்த இல்ஹாம் முதலிலேயே அறிவிக்கப்பட்டது. பிறகு நமக்கே வெற்றி கிடைத்தது.

ஐந்தாவது மல்யுத்தம் மிர்ஸா அஹ்மது பேக் உடைய ஹோஷியார்பூர் வழக்கு ஆகும். அவரது உறவினர்களும் நேசர்களும் இஸ்லாத்தை பழித்து வந்தனர். அவர்களுள் சில முர்தத்துகள் திருக்குர்ஆனைப் பொய்ப்படுத்தி இஸ்லாம் பற்றி தீய வார்த்தைகளைக் கூறி என்னிடம் இஸ்லாத்தின் உண்மைக்கு ஆதாரம் கேட்டனர். பிரசுரமும் வெளியிட்டனர். அவர்களுக்கு அடையாளம் தரப்பட்டது. அஹ்மது பேக் உடைய மரணம் மற்றும் சில தொல்லைகளைப் பார்த்த பிறகு அவர் மூன்று வருடங்களில் மரிப்பார் என்று கூறப்பட்டது போன்று அவர் குறிப்பிட்ட காலத்திற்குள் மரித்ததும் ஒவ்வொரு தீயவருக்கும் தண்டனை உண்டு என்று

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக உம்முடைய இறைவன் மட்டுமே அவனுடைய வழியிலிருந்து தவறுகின்றவர்களை நன்று அறிகின்றான். அவனே நேர்வழியில் செல்கின்றவர்களையும் நன்கு அறிகின்றான். (6:118)

A.Basheer Ahmad, Melapalayam

தெரிவதற்காக இவை நடந்ததும் அடையாளங்களாகும்.

(அய்யாமுஸ் சுலஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 325–327)

ஆக அன்னார் உலகை எச்சரித்தார்கள். இறைவனால் அனுப்பப்பட்டவருடன் சண்டையிடாதீர்கள் என்றார்கள். அல்லாஹ் அனுப்பும்போது உதவி ஒத்தாசையும் வழங்குவான்.

அன்னார் கூறினார்கள்: அல்லாஹ் என்னிடம் கம்பீரமான வார்த்தைகளில் கூறினான். உலகில் ஒரு எச்சரிப்பாளர் வந்தார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஏற்பான். பெரும் வல்லமைமிக்க தாக்குதல்கள் மூலம் அவரது உண்மையை வெளிப்படுத்துவான்.

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 4, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 665, அடிக்குறிப்பு எண் 4)

இன்று உலகில் 200 நாடுகளுக்கு மேல் அஹ்மதிய்யா ஜமாஅத் இதனை அறிவிக்கிறது. அன்னாரின் உண்மையை அல்லாஹ் உலகில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறான். அல்லாஹ் நமக்கும் அன்னாரின் பிரச்சாரத்தைப் பரப்புவதற்கும் அதனைச் செய்பவர்களில் பங்கு பெறுவதற்கும் வாய்ப்பு வழங்குவானாக. நமது ஈமான் மற்றும் திட உறுதியை உறுதிப்படுத்துவானாக. நமக்கு நமது பொறுப்புகளை நிறைவேற்ற வாய்ப்பு வழங்குவானாக.

இப்போது நான் உலகில் பரவியுள்ள தொற்று நோய் பற்றி உலகவாதிகளின் கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பிலிப் ஜான்ஸ்டன் டெய்லி 18 மார்ச் 2020 –ல் டெலிகிராஃபில் எழுதுகிறார்கள்: நெட் பிலிக்ஸ்கள் மற்றும் பிற பிளாட்ஃபார்ம் மூலம் வரும் ரிப்போர்ட் ஆனது 2011 –ல் வெளி வந்த ஒரு படமாகிய Contagion உடைய கதையை ஒப்புமைப்படுத்துகிறது. அதன் கதையில் ஒரு வைரஸ் பெருகி மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் உடல்நல நிபுணர்கள் அதனைக் கண்டுணர்ந்து அதனைக் கட்டுப்படுத்த பெரும் முயற்சி செய்தும் அதனைத் தடுக்க ஒரு தடுப்பு மருந்துதான் கண்டுபிடிக்கப்படுவது பற்றி வருகிறது.

அவர் எழுதுகிறார்: நான் யோசிக்கிறேன். உலகின் அழிவு குறித்த கருத்தை விளக்கும் ஃபிலிம்களில் கவனம் ஏற்படுதல், தமது நீண்ட கால நிலைத்து நிற்றலின் முன்னேற்றத்தின் விளைவாகும். நம்மில் பெரும்பாலாரின் எண்ணம் இந்த முன்னேற்றம் எப்போதும் இருக்கும் என்பதாகும். இது மிகவும் வியப்புக்குரியது. இரண்டு வாரத்திற்குள் நமது உலகம் முற்றிலும் மாறி விட்டது என்று அவர் கூறுகிறார்.

மேலும் எழுதுகிறார்: கடந்த உலகப்போர் நடக்கும் வேளையில் கூட மக்கள் தியேட்டர், சினிமா, ரெஸ்டாரெண்ட், கபே, கிளப்புகள் சுருக்கமாக அவர்களுக்கு இவையெல்லாம் கிடைத்து வந்தன. தற்காலத்தில் அது கூட செல்ல முடியாது.

பிறகு கூறுகிறார்: நமக்கு முன்னால் இரண்டாம் உலகப்போர் நடந்துள்ளது. நம்மிடம் மகிழ்ச்சி, நிலைப்பு, திருப்தி ஆகிய எதிர்பார்ப்புகள் இருக்கவே செய்தன. முந்தைய சந்ததிகள் இதனை நினைத்தும் பார்த்ததில்லை. இக்கால மக்கள் அத்தகைய சூழ்நிலைகளில் உள்ளனர்.

மேலும் எழுதுகிறார்: ஒரு எதிர்பார்ப்பு அறிவியல் இந்த நோயிற்கு ஒரு தடுப்பு மருந்து (வேக்ஸின்) அல்லது மருந்து நம்மை காப்பாற்ற கண்டுபிடிக்கலாம். அமெரிக்காவில் Seattle பகுதியில் மனிதத் தன்னார்வலர்களுக்கு அனுபவம் ஏற்பட்டுள்ளது. இதில் கெட்ட செய்தி என்னவெனில், இந்த வேக்ஸின் பயன்படுமா? பயன்படாதா? என அறிவதற்கும் பல மாதங்கள் ஆகலாம்.

மேலும் எழுதுகிறார்: முழு வரலாற்றிலும் மக்கள் இதுபோன்ற நிலையில் தமது கொள்கையினைச் சார்ந்து நின்று வாழ்வைக் கழித்து வந்துள்ளார்கள். முழு வரலாற்றிலும் மக்கள் இதுபோன்ற நிலையில் தமது கொள்கையைச் சார்ந்து நின்றுள்ளனர். அதாவது அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்தியுள்ளனர். இவர்களுக்கோ இவர்களது அன்புக்குரியவர்களுக்கோ ஏதும் ஏற்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ளவும், பொருள் கொடுக்கவும் மார்க்கத்தில்தான் வழி உள்ளது. மார்க்கமற்றவர்கள் தமது ஆறுதலுக்காக செக்கியூலர் மனிதத்துவத்திற்குப் பிடித்தமான கொள்கைகளை உருவாக்குகின்றனர்.

மார்க்கமற்றவர்களின் சிந்தனை அடிப்படையில் இது ஒளிமிக்க சிந்தனையின் கருத்தாகும். மேம்படுத்த முடியும் என்றும் இதனை இறைவனது வல்லமை மற்றும் தண்டனையுடன் இணைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அறிவியலாளர்கள் ஒரு தீர்வு கண்டுபிடித்து விடுவார்கள். எல்லாம் சரியாகி விடும் என்று எத்தனை முறை நாம் மக்கள் கூறக் கேட்டுள்ளோம். குளோபல் வார்மிங் (பூமி சூடாகுதல்) பிரச்சனையாகட்டும், தொற்றுநோயாகட்டும் இவையெல்லாம் மேற்கண்ட சிந்தனை சரியா? என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. பிறகு அவ்வாறு இல்லை எனில் நான் சர்ச்சின் பக்கம் திரும்பிச் செல்கிறேன். வெளிப்படையான இறைவனை விட்டு விலகி இருப்பவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். அறிவியலாளர்கள் சொல்வது போன்று இல்லையெனில் நாம் சர்ச்சின் பக்கம் செல்வது பற்றி யோசிக்க வேண்டியதுள்ளது என்கிறார்.

இந்த வைரஸ் உலகை இவ்வாறு சிந்திக்க வைத்துள்ளது. இறைவன் பக்கம் திரும்ப வேண்டும் என்று எண்ண வைத்துள்ளது. ஆனால் உண்மையான இறைவன் உயிருள்ள இறைவன் இஸ்லாத்தின் இறைவனே ஆவான். அவன் தன் பக்கம் வருபவர்களுக்கு வழிகாட்டுவதாக அறிவித்துள்ளான். ஓர் அடி வைப்பவருக்கு பல அடி முன் வந்து கையைப் பிடிப்பதாக அறிவித்துள்ளான். தனது அடைக்கலத்தில் எடுப்பதாக அறிவித்துள்ளான்.

எனவே இந்த நிலையில் நாம் நமது நிலைமைகளைக் கவனிக்கும் வேளையில் தமது தப்லீகையும் அழகிய முறையில் செய்வது அவசியமாகும். உலகிற்கு இஸ்லாம் பற்றி முன்பை விட அதிகமாக நினைவுபடுத்த வேண்டும். பிறகு ஒவ்வோர் அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். உலகில் தாம் நிலைத்திருக்க விரும்பினால் தம்மை உருவாக்கிய இறைவனை அறிய வேண்டும். சிறந்த முடிவை விரும்பினால் உங்களை உருவாக்கிய இறைவனைக் கண்டறியுங்கள். இறுதிக் காலத்தின் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை ஆகும். அவனுக்கு எதனையும் இணை வைக்காதீர்கள். அவனது அடியார்களின் உரிமையை வழங்குங்கள். எனவே நாம் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் எல்லாருக்கும் அதற்கான

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் பெயர் கூறப்படாததிலிருந்து நீங்கள் உண்ணாதீர்கள். நிச்சயமாக இது கீழ்ப்படியாமையாகும். நிச்சயமாக ஷைத்தான்கள் உங்களுடன் சச்சரவு ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தைத் தமது நண்பர்களின் உள்ளங்களில் போடுகிறான். நீங்கள் அவர்களுக்குக் கட்டுப்பட்டீர்களாயின், நிச்சயமாக நீங்கள் இணை வைப்பவர்களாகி விடுவீர்கள். (6:122)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

வாய்ப்பினை வழங்குவானாக. இந்த ஆபத்து அதிகமானால், நல்ல விளைவு ஏற்பட நாம் இறைவன் பக்கம் திரும்ப வேண்டியதுடன் உலகவாதிகளிடமும் அதனைத் தெளிவுபடுத்த வேண்டும். இறுதி முடிவு கடைசி கால வாழ்வின் முடிவே ஆகும். அதற்காக எவ்வாறேனும் அல்லாஹ்விடமே வர வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும்.

இது பற்றி ஒரு நிபுணரின் எச்சரிக்கை என்னவெனில் The Times –ல் 6 மார்ச் அன்று ஒரு கட்டுரை வெளி வந்திருந்தது. அந்த நிபுணர் எச்சரித்திருந்தார். ஆபத்தான வைரஸ்களில் மரபணு மாற்றங்கள் ஏற்படம் சாத்திய உண்டு. இதனால் சில வருடங்களில் வேறு வகை கொரோனா வைரஸ் உருவாகவும் சாத்தியமுண்டு. எனவே மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வேறு ஒரு வகை நோய் வரலாம் என்று கூறுகிறார்.

பிறகு லூம்பர்க் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்: கொரோனா வைரஸிலிருந்து விஞ்ஞானிகள் ஒரு பாதுகாப்பை உருவாக்கலாம். ஆனால் தொற்று நோய்களுக்கு எதிராக மனித இனத்தின் யுத்தம் முடியாத யுத்தமாகும். மனித இனத்திற்கும் நுண்ணுயிரிகளுக்கும் இடையில் முன்னேற்றத்தின் பந்தயத்தில் நுண்ணுயிரிகளே முன்னால் வருகின்றன. World Health Organisaton –ன் கூற்றுக்கேற்ப 1970 –க்குப் பிறகு 1500 புதிய வைரஸ்கள் கண்டறியப்பட்டுள்ளன. 21 –ம் நூற்றாண்டில் பல மடங்கு அதிகமாக புதிய நோய்கள் பரவுகின்றன. முதலில் குறிப்பிட்ட எல்லைக்குள் மக்கள் இருந்தனர். இப்போது உலக அளவில் நோய் பரவ முடியும்.

எனவே இது ஒரு நீண்ட விளக்கமாகும். எல்லாவற்றையும் கூற முடியாது. ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று நமது நல்ல முடிவுக்காக அல்லாஹ்விடம் முன்னரே அதிகமாக குனிவது அவசியமாகும். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக.

கொரானா தொற்று நோய் பற்றி முதலிலும் நான் வழிகாட்டல் வழங்கியுள்ளேன். இப்போதும் நினைவுபடுத்துகிறேன். ஏனெனில் முழு உலகிலும் விரைவாக பரவுகிறது. இங்கும் இதன் தாக்கம் அதிகமாக உள்ளது. எனவே நிர்பந்தமாக அரசும் கடும் எதிர்நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தொற்று நோய்கள் வரும்போது ஒவ்வொருவரையும் தமது வயிற்றில் அது எடுத்துக் கொள்ள முடியும். எனவே ஒவ்வொருவரும் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். அரசின் கட்டளைகளை அமல்படுத்துங்கள். அதிக வயதானவர்கள், நோயாளிகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள நோயாளிகள் ஆகியோர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அதிக வயதானவர்கள் வீட்டிலிருந்து குறைவாகவே வெளியில் வர வேண்டும். இதுவே அரசின் அறிவிப்பும் ஆகும். பிறகு நல்ல உடல்நலம் இருப்பவரும் வீட்டில் இருக்க வேண்டும். இங்கு பள்ளிக்கு வருவதற்கும் எச்சரிக்கையாக இருங்கள். ஜுமுஆ கூட உங்கள் பகுதியிலுள்ள பள்ளியில் தொழுங்கள். இங்கு வருகையைப் பார்க்கும்போது ஜுமுஆவுக்காகவும் ஒன்று கூடக்கூடாது என்பது அரசின் அறிவிப்பு வந்தால் தவிர மக்களுள் பெரும்பாலார் தமது பகுதியில் தொழுகின்றனர் என்று தெரிகிறது. பிள்ளைகளுடன் வரக்கூடிய பெண்கள் வருவதிலிருந்து விலகி இருங்கள்.

பிறகு டாக்டர்கள் இதனையே கூறுகின்றனர்: உங்கள் உடலில் நோய் எதிர்ப்பு ஆற்றலை வளர்க்க உங்கள் ஓய்வில் கவனத்தைச் செலுத்த வேண்டும். உங்கள் தூக்கத்தை முழுமையாகத் தூங்க வேண்டும். நீங்களும் குழந்தைகளும் சரி. பெரியவர்கள் 6–7 மணி நேரங்களும் குழந்தைகள் 8–9 மணி நேரம் அல்லது 10 மணி நேரங்கள் உறங்க வேண்டும். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இரவு முழுவதும் டி.வி பார்த்துக் கொண்டே இருப்பதும், 12.00 மணி வரை பார்த்தால் காலையில் தொழுகைக்காக எழ முடியாது.

பிறகு வேகமாக எழுந்து பணிக்குச் செல்வது. இதனால் பிரச்சனை என்னவெனில், நாள் முழுவதும் சோம்பல், பணியில் சோம்பல் ஏற்படுவதுடன் இதுபோன்ற நோய்களும் தாக்குகின்றன. அதுபோன்று குழந்தைகளும் விரைவாக உறங்குங்கள். விரைவாக எழுங்கள். 8–9 மணி நேரம் தூங்கி விட்டு எழ வேண்டும். பிறகு கடைத்தெருவில் வாங்கி உண்பதிலிருந்து விலகுங்கள். இதனாலும் நோய் பரவுகிறது. குறிப்பாக சிப்ஸ் போன்ற பாக்கெட்டுகளையும் மக்கள் குழந்தைகளுக்கு மற்ற உணவுப் பண்டங்களையும் வாங்கிக் கொடுக்கின்றனர். சில உணவுகளை செய்து வைத்திருக்கின்றனர். அவை உடல்நலத்திற்கு கேடு விளைவிப்பவை. அவற்றிலிருந்தும் விலகி இருக்க வேண்டும். இதுவும் சிறிது சிறிதாக மனித உடலை பலவீனமாக்குகிறது.

பிறகு தற்காலத்தில் டாக்டர்கள் கூறுகின்றனர்: தண்ணீர் அடிக்கடி குடிக்க வேண்டும். ஒரு மணி அல்லது அரை மணி அல்லது முக்கால் மணிக்கு ஒருமுறை தண்ணீர் சிறிது பருகுங்கள். நோய்களிலிருந்து தப்ப ஒரு வழி கைகளை தூய்மையாக வைக்க வேண்டும்.

Sanitizer கிடைக்காவிட்டால் கைகளைக் கழுவுங்கள். ஒரு நாளைக்கு ஐந்து முறை உளூ செய்பவருக்கு சுத்தம் செய்ய வாய்ப்புக் கிடைக்கிறது. இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். மஸ்ஜிதுகளிலும் சரி வீடுகளிலும் சரி ஓய்வாக இருக்கும்போதும் சரி கைக்குட்டை வைத்துக் கொண்டு மூக்கைச் சிந்த வேண்டும்.

டாக்டர் கூறுகின்றார்: ஏதாவது ஒருவரை அருகில் வைத்துக் கொண்டு மூக்கைச் சிந்தக் கூடாது. ஆங்காங்கே தெறிக்கும் வகையில் வெறுமனே மூக்கை சிந்தி விடக்கூடாது.

எவ்வாறிருப்பினும் தூய்மை அவசியமாகும். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இறுதி ஆயுதம் துஆ ஆகும். அல்லாஹ் நம் அனைவரையும் இந்த நோயிலிருந்து பாதுகாப்பானாக. இந்த நோயினால் ஏதாவது காரணத்தால் பாதிக்கப்பட்ட அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆ செய்யுங்கள். அல்லது டாக்டர்களில் சிலரிடம் வைரஸ் இருக்கிறது என்று சந்தேகம் இருக்கும் எனில் அத்தகைய அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லது வேறு ஏதாவது நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி துஆ செய்யுங்கள்.

அதுபோன்று பலவீனமாக இருந்தால் வைரஸ் தாக்குதல் தொடுக்கும். அல்லாஹ் அத்தகையோருக்காக பாதுகாப்பு தர துஆ செய்யுங்கள். குறிப்பாக ஒவ்வொருவருக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த உலகத்தை இந்த தொற்று நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பானாக. நோயாளிகளுக்கு முழுமையான நிவாரணம் வழங்குவானாக. ஒவ்வோர் அஹ்மதிக்கும் பாதுகாப்பு வழங்குவதுடன் ஈமான் மற்றும் திட உறுதியும் பெரும் தவ்ஃபீக்

### திருக்குர்ஆனிலிருந்து...

வெளிப்படையானதும், மறைவானதுமான பாவத்திலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். பாவத்தைச் சம்பாதிக்கிறவர்களுக்கு நிச்சயமாக அவர்கள் சம்பாதித்ததற்குரிய கூலி கொடுக்கப்படும். (6:121)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)

சுப்ஹானல்லாஹ்! என்ற சொற்கள் வந்த வண்ணமாக இருந்தது. கவனயீர்ப்பு மற்றும் மெஸ்மரீசம் மூலம் ஓர் எல்லை வரை இவ்வாறு செய்ய வைப்பது சாத்தியம் என கேள்விப்பட்டுள்ளேன், ஆனால் ஆயிரக்கணக்கில் கூடியுள்ளவர்களின் மீது அதுவும் பல்வேறு ஆற்றகள், கொள்கைகள், சிந்தனைகள் கொண்ட மக்கள் கூட்டத்தில் இந்த நிலை ஏற்படுவது நிச்சயமாக வழக்கத்திற்கு மாற்றமானதும் முஅஜிஜா முறையிலான தாக்கத்தின் விளைவே ஆகும். ஹஸ்ரத் மவ்லானா மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களுக்கு திருக்குர்ஆனின் மீது ஓர் அன்பு இருந்தது என்பது உண்மையாகும், மேலும் இறைவன் அவர்களுக்கு குரல் வளத்தையும் வழங்கியிருந்தான்.

மேலும் அவர்கள் அந்த வசனங்கள் மற்றம் கட்டுரையின் ஆழிய கருத்துக்களின் தாக்கத்தை உள்வாங்கி உருக்கத்துடனும் ஆர்வத்துடனும் திலாவத் செய்வார்கள் அவர்களின் வாசித்தல், அவர்களின் உள்ளத்தின் நிலை மற்றும் இன்பமும் இனிமையும் கலந்து இருப்பதால் பார்வையாளர்களை தாக்கத்திற்குள்ளாகாமல் இருப்பதில்லை. ஆனால் இந்த கூட்டத்தின் நிலை முற்றிலும் வேறுப்பட்டதாக இருந்தது, சூழல் எவ்வாறானதாக இருந்தது என்றால் ஆரம்பம் முதல் குர்ஆனின் இறுதி வசனம் என்ன, அதன் விளக்கம் மற்றும் விரிவுரை என்ன, முழுக் கட்டுரையும் கருத்தாழமிக்கதாகவும், பயனுள்ளதாகவும், உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாகவும் எந்தளவுக்கு இருந்தது எனில் மவ்லவி சாஹிப் அவர்களின் தொனியிலும் வித்தியாசம் ஏற்படவில்லை. இன்பத்திலும் ஆர்வத்திலும் குறைவு ஏற்படவுமில்லை.

அதிகமான ஆதாரங்களுடன் தொடர்ச்சியான வாக்கியங்கள் கட்டுரையின் மேன்மை மற்றும் நம்பகத்தன்மை பார்வையாளர்களை வசியம் செய்ததை போன்று சற்று மெய்மறக்கச் செய்திருந்தது. இந்து, சீக்கியர் மட்டுமல்ல தீவிர ஆரிய சமாஜ் மற்றும் கிருஸ்தவர்கள் வரை கட்டுப்பாடு இன்றி சுப்ஹானல்லாஹ்! சுப்ஹானல்லாஹ்! என்று கூறுவதை நான் எனது காதுகளால் கேட்டேன்.

ஆயிரக்கணக்கான மனிதர்களின் இந்த கூட்டம் உயிர் அற்ற சிலையை போன்று எவ்வித அசைவும் இன்றி அமர்ந்திருந்தது, அவர்களின் தலையில் பறவைகள் வந்து அமர்ந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. கட்டுரையின் ஆன்மீக நிலை உள்ளத்தை ஆட்கொண்டிருந்தது, அதன் வாசிப்பின் சப்தத்தை தவிர சுவாசிப்பின் சப்பதமும் இருக்கவில்லை எந்தளவுக்கு என்றால் இறைவனின் வல்லமையினால் விலங்குகளும் கூட மௌனமாக இருந்தது, கட்டுரையின் ஈர்ப்பின் தாக்கம் வெளிப்புற சப்தங்களை இடையூறு செய்யத்தக்கதாக ஆக்கவில்லை, ஏறக்குறைய தொடர்ச்சியாக இரண்டு மணி நேரம் இந்த நிலையே நீடித்தது.

இந்த நிலையை வெளிப்படுத்தும் ஆற்றல் எனக்கு இல்லை என்பது வருத்தத்திற்குரியதாகும், அங்கு நான் பார்த்ததையும் கேட்டதையும் அவ்வாறே எடுத்துக்கூறும் தகுதியை பெற்றவனாக இருந்திருக்க கூடாதா! அதனால் அந்த அறிவார்ந்த முஅஜிஜா மற்றும் அடையாளத்தின் மகத்துவம் உலகில் தெளிவாக வெளிப்பட்டு இறைவனின் படைப்பினங்களின் காதுகள் உண்மையை கேட்பதற்கும், உள்ளம் அதனை ஏற்றுக்கொள்வதற்கும் ஆயத்தமாகி அதன் மூலம் உலகெங்கிலும் உள்ள பாவங்கள், தீமைகள், மற்றும் கவனமின்மை தூரமாகி, ஆயிரக்கணக்கான மனிதர்கள் உண்மையை ஒப்புக்கொள்ளும் நல்வாய்ப்பை பெற்று இருப்பார்கள்.

(15) மூன்றரை மணி ஆனது, நேரம் முடிந்த காரணத்தினால் சில நிமிடங்கள் அந்த இன்பம் மற்றும் இனிமையின் நிலையில் இடைவெளி ஏற்பட்டது. அடுத்த அரை மணி நேரம் மவ்லவி முபாரக் அலி சாஹிப் சியால்கோட்டி அவர்களின் கட்டுரைக்குரியதாக இருந்தது. அவர்கள் உடனே எழுந்து நின்று, கூட்டத்தினர்களின் விருப்பமாகிய இந்த கட்டுரையை தொடரச் செய்யவும் மற்றவர்களுக்கு பகரமாக இந்த கட்டுரைக்கு நேரத்தை தரவேண்டும் இந்த கட்டுரையை முழுவதும் முழுமை செய்யவேண்டும் என்பதற்கு தனது நேரத்தை கொடுத்து முடித்துக்கொண்டார்கள் மாறாக இவ்வாறு அறிவிப்பு செய்தார்கள் நான் எனது நேரத்தை மற்றும் எனது விருப்பத்தை இந்த மதிப்புமிகு கட்டுரைக்காக தியாகம் செய்கிறேன்.

எனவே பிறகு அதே அன்பான, லயிக்கச் செய்யும், உள்ளத்தை ஈர்க்கக் கூடிய மகிழ்விக்கும் கருத்துக்கள் ஆரம்பமானது மேலும் அதே சூழல் உருவானது. மணி நான்கு ஆனது ஆனால் கட்டுரை எஞ்சி இருந்தது. மேலும் மக்களின் தாகம் குறைவதற்கு பதிலாக அதிகரித்துக் கொண்டே இருந்தது. பார்வையாளர்களின் விருப்பம் மற்றும் ஏற்பாட்டாளர்களின் ஆர்வத்தின் காரணமாக ஐந்தரை மணி வரை கட்டுரை வாசிக்கப்பட்டுக் கொண்டே இருந்தது. இரவின் இருள் தன் கரும் போர்வையை விரிக்கத் தொடங்கியது. வேறு வழி இன்றி இந்த மிக இனிமையான, ஞானங்கள் நிறைந்த, இன்பத்தை வழங்கும் கூட்டம் நிறைவை எட்டியது. கட்டுரையின் மிச்சப்பகுதி 29 டிசம்பருக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதன் இனிமையை உணராததாக எந்த உள்ளமும் இருக்க வில்லை, இதன் சிறப்பையும் மேன்மையையும் ஒப்புக்கொள்ளாத எந்த நாவும் இருக்கவில்லை இதனை புகழ்துரைப்பதிலிருந்து விலகியதாக எந்த நாவும் இருக்கவில்லை. ஒவ்வொருவரும் தமது நிலை மற்றும் கூற்றின் மூலம், உண்மையிலேயே இந்த கட்டுரை அனைத்தின் மீதும் வெற்றி பெற்றது, தனது உயர்வு , இனிமை மற்றும் மேன்மையின் காரணமாக இந்த மாநாட்டின் அழகாகவும் உயிரின் ஊற்றாகவும் வெற்றியின் உத்திரவாதமும் ஆகும் என ஒப்புக்கொண்டவர்களாக இருந்தனர். இது மட்டுமல்ல மாறாக நாம் நமது காதுகளால் கேட்டவை கண்களால் பார்த்தவை என்னெவென்றால் பல இந்து மற்றும் சீக்கிய சகோதரர்கள் முஸ்லிம்களை கட்டித்தழுவி இவ்வாறு கூறினார்கள்:

இன்று மிர்ஸா சாஹிப் அவர்கள் எடுத்துக்கூறிய இதுவே குர்ஆனின் போதனை மற்றும் இஸ்லாம் என்றால் நாங்கள் இன்று இல்லை என்றாலும் நாளை அதனை ஏற்றுக்கொள்ளும் கட்டாயத்திற்கு உள்ளாவோம், மேலும் மிர்ஸா சாஹிப் அவர்களின் ஓரிரு கட்டுரை இதைபோன்று கேட்கச் செய்தால் நிச்சயமாக இஸ்லாமே எங்களது மார்க்கமாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

(16) டிசம்பர் 27 மாநாட்டின் இன்றை நிகழ்ச்சி நிறைவடைந்தது, மக்கள் வீடுகளுக்கு திரும்பிக்கொண்டு இருந்தனர் மாநாட்டின் நுழைவாயிலின் இரு புறமும் அந்த மனிதர் நின்றுகொண்டு சைதினா ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் அதே பிரசுரத்தை எதனை ஹுஸூர் அவர்கள் என்னிடம் முக்கியமான இடங்களில் ஒட்டப்பட வேண்டும் மேலும் மாநாட்டிற்கு முன்னரே அதிகமாக வெளியிட வேண்டும் என வலியுறுத்திய மாறாக இது குறைவாகும் தேவைப்பட்டால் லாஹூரிலேயே அச்சடித்து கொள்ளுங்கள் அதன்

## திருக்குர்ஆனிலிருந்து...

இது உம்முடைய இறைவனின் நேரான வழியாகும். அறிவுரையினைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு அடையாளங்களை நாம் நிச்சயமாக மிகத் தெளிவாக விளக்கியுள்ளோம். (6:127)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

மூலம் நல்ல ஆன்மாக்கள் உண்மையினை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக வேண்டி இறைவனின் அடையாளத்தின் மகத்துவம் முன்னதாக வெளிப்பட வேண்டும் எனக்கூறி கொடுத்து அனுப்பி இருந்தார்களோ அதனை விநியோகம் செய்து கொண்டு இருந்ததை நான் பார்க்கிறேன். ஆனால் காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களின் அச்சத்தின் காரணமாக முழு உலகமும் முதலில் இறை அடையாளத்தின் மகத்துவத்தை கண்டது மேலும் அதன் வெற்றியை ஏற்றுக்கொண்டது.

அதன் பல நாட்களுக்கு முன்னர் அச்சடிக்கப்பட்டு நன்றாக பரப்புவதற்கு அனுப்பப்பட்ட அந்த பிரசுரம் பிறகு விநியோகிக்கப்பட்டது. எனவே சையிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு காஜா சாஹிபின் பலவீனம் மற்றும் கவனமின்மை தெரிய வந்தபோது ஹுஸுர் அவர்கள் அதிகமாக கடிந்து கொண்டார்கள் பல நாட்கள் வரை எப்போதெல்லாம் இந்த இறை அடையாளம் நினைவு கூறப்படுகிறதோ அல்லது வெளி இடங்களிலிருந்து அதன் வெற்றி தொடர்பான அறிக்கைகள் வருகிறதோ அத்துடன் காஜா சாஹிபின் இந்த பலவீனத்தின் கவலை வெளிப்படுவதை கேட்க முடிந்தது.

கட்டுரை ஏற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் பொதுமக்களின் எதிர்பார்ப்பின் தாக்கத்தால் மாநாட்டு ஏற்பாடு கமிட்டி குழுவின் சிறப்பு கூட்டம் கூடியது அதில் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களின் கட்டுரை முழுமையாக கேட்கப்பட மஜ்லிஸ் தமது நிகழ்ச்சியில் மேலும் ஒரு நாள் 29 டிசம்பர் அதிகப்படுத்தி நான்காவது நாளும் இணைக்கப்படுகிறது என தீர்மானம் நிறைவேற்றியது.

ஹுஸுர் அவர்களின் கட்டுரைக்கு கிடைத்த அசாதாரண ஏற்பு மாற்றார்களுக்கு சரியென எப்போது தோன்றியது. மவ்லவி முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள் நேரம் அதிகப்படுத்தப்பட்டு இருப்பதின் சிறப்பு மற்றும் முக்கியத்துவத்தை குறைப்பதின் முயற்சியில், தனக்கும் நேரம் அதிகப்படுத்தவேண்டும் என விண்ணப்பித்தார். எனவே அவருக்கு அரை மணி நேரம் அதிகப்படுத்தப்பட்டது, ஆனால் அடுத்தநாள் அவர் வரவில்லை தனது நேரத்தை மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவி அவர்களுக்கு விட்டுக்கொடுத்தார்.

அதன் காரணம் வெட்டவெளிச்சமாகும். ஆனால் இறைவனின் மகத்துவம் ! பார்வையாளர்கள் ஆர்வம் எவ்வாறு இருந்தது என்றால் நேற்றை போன்று கூட்டம் அதிகமாக வேண்டாம் மேலும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் எழவும் வேண்டாம் என்பதை போன்று மாநாட்டுத் திடல் நிறம்ப வேண்டும் என்பதிலேயே நேரம் கழிந்தது. இறுதியில் அதிக எதிர்பார்ப்புக்கு பிறகு அந்த விருப்பம் நிறைவேறுவதாக தென்படவில்லை எனும் போது உள்ளவிருப்பு மற்றும் வேறு வழி இன்றி எழுந்து நின்று எதனை எழுதியிருந்தாரோ அதனை படித்தார்கள், அதிக நேரத்தை எடுத்தும் கூட தானும் மகிழ்ச்சிக்குள்ளாகவில்லை. பொது மக்களும் பாராட்டவில்லை.

(17) 29 டிசம்பர் காலை ஒன்பது அரைக்கு மாநாட்டின் ஏற்பாடுகள் ஆரம்பமாக இருந்தது, டிசம்பரின் இறுதி என்பதால் குளிர் அதிகமாக இருந்தது, அதிகாலை நேரம் மக்கள் தங்களின் தேவைகளை நிறைவேற்றுவது ஒரு பக்கம் இருக்கட்டும் இவ்வளவு அதிகாலையில் நகரத்து மக்கள் விழிக்கும் பழக்கமும் இல்லாதவர்களாக இருப்பார்கள். வருகை குறைவாக இருக்கும் என்ற அச்சம் இருந்தது, இவ்வாறு அந்த இன்பம் இருக்க வாய்ப்பு இல்லை என்ற கவலை இருந்தது.

ஆனால் இறைவனுடைய வேலை எந்த ஆற்றலாலும் தடுக்க இயலாத ஓர் அசாதாரண ஈர்ப்பு மற்றும் காந்த சக்தியை தன்னுள் கொண்டதாகும். மனிதன் கவனமின்மை மற்றும் சோம்பலை காட்டினால் அவன் வானவர்களை கொண்டு தன் வேலையை செய்கிறான். எனவே அதிகாலை குளிரில் நடுங்கியவர்களாக கூனிக்குறுகியவர்களாக இறை படைப்பினங்கள் அதிகமாக அலை அலையாக, வேகமாக கூட்டம் கூட்டமாக வந்தனர், 27 மதிய வேளைக்கு பிறகு இருந்த காட்சியும் தோற்றுப்போனது மேலும் மாநாடு மிகவும் வாகையுடனும் மகத்துவத்துடனும் சிறப்பாக ஆரம்பமானது பிறகு மிகவும் வெற்றிகரமாக நிறைவடைந்தது, இவ்வாறாக ஹுஸுர் அவர்களின் கட்டுரை முழு உலகிலும் அலா ரஃமி உனூஃபில் அஹ்தா தனது வெற்றி, மேன்மை , தேர்ச்சி மற்றும் மகத்துவம், உண்மைத்துவம் ஆகியவற்றின் முத்திரையை பதித்து அறிவு உலகில் எப்போதும் நிலைநிற்கும் அடையாளமாகி வானிலுள்ள சூரியன் சந்திரனை போன்று ஒளிவீசக்கூடியதாக ஆனது.

நண்பர்கள் ஒருபுறம் இருக்கட்டும் எதிரிகளும் புகழாமல் இருக்க முடியவில்லை. நம்மவர்கள், மற்றவர்கள், பொதுமக்கள், ஏற்பாட்டாளர்கள் ஆக அனைத்து துறையினர்கள் மத்தியிலும் இந்த கட்டுரையைப் பற்றி பேசப்பட்டது. பத்திரிக்கைகள் தலையங்கம் எழுதின மேலும் இந்த உண்மையை உறுதி செய்தன. ஏற்பாட்டு கமிட்டி தம் சார்பாக இந்த வெற்றியை அதன் அறிக்கையில் எழுதி உண்மையை வெளியிட்டது.

மேலே உள்ள சந்திரனின் ஒளி மறைக்கப்பட முடியாது என்பது உண்மையகும், அதனை மறுப்பது மடமையின் ஆதாரமாகும். இவ்வாறாக இறைவன் தனது தூய ஒப்புக்கொள்ளப்பட்ட அடியார் சையிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் முன்னறிவித்த விசயங்கள் நிறைவேறியது. இறைவன் கூற்று முழுமை ஆனது, உலகின் எந்த சக்தி , எந்த திட்டம், ஏமாற்று , தந்திரங்கள் தடையாக இருக்கமுடிய வில்லை.

(18) மாபெரும் சர்வசமய மாநாட்டின் ரிப்போர்ட் வெளிவந்தது. ஏற்பாட்டாளர்கள் கமிட்டியில் உறுப்பினர்களாக அனைத்து மார்க்க மதத்தின் உறுப்பினர்கள் உயர்தகுதி பொறுப்பாளர்கள் இருந்தனர். அவர்களின் முயற்சி மற்றும் செலவில் வெளியிடப்பட்டது. மார்க்கத்தின் உண்மைத்துவத்தைப் பற்றி உலகம் அறிந்து கொள்வதற்காகவும், மைதானத்தில் போட்டிக்காக வருகின்றவர்கள் அனைவரும் சிந்தித்து முடிவெடுக்கவும், மேலும் உண்மையையும் பொய்யையும் பிரித்தறிந்து தெரிந்து கொள்வதற்காகவும் மாநாட்டில் படித்துக் காட்டப்பட்ட அனைத்து கட்டுரைகளும், மேலும் அதற்காக எழுதப்பட்ட கட்டுரைகளும் எவ்வித மாற்றமுமின்றி வெளியிடப்பட்டது.

ஆனால் உண்மை என்ன எனில் , திருக்குர்ஆனின் மகத்துவம், இஸ்லாத்தின் உண்மை தன்மை, முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் சையதுனா ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனின் நெருக்கம் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடியார் ஆவார், அவனின் அழைப்பில் பேசக்கூடியவர் , அவனின் உண்மையான நபி மற்றும் ரஸுல் என்பதற்கு ஓர் சான்றாக, தெளிவான ஆதாரமாக இந்த வேலைகள் நிரந்தரமாக நிலைநாட்டப்பட்டன.

ஹுஸுர் அவர்களின் இந்த கட்டுரை உருதுவில் இஸ்லாமி உஸுல் கி ஃபிலாஸஃபி என்ற பெயரிலும் ஆங்கிலத்தில் டீசிங்ஸ் ஆஃப் இஸ்லாம் (தமிழில் இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம்) என்ற பெயரிலும் தலைப்பில் பல முறை ஆயிரக்கணக்கான மாறாக இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் அச்சடிக்கப்பட்டு முழு உலகமும் ஆன்மீக சுவை மற்றும் இனிமையை பெற மேலும் நேர்வழியினை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல உலகின் பல மொழிகளில் அச்சிடப்பட்டு வெளிவந்த வண்ணமாக உள்ளது.

(19) ரிப்போர்ட் வெளியிடப்பட்டது, ஆயிரக்கணக்கான மனிதர்கள் மாநாட்டில் எதனை கண்டார்களோ, கேட்டார்களோ அதுவே

ரிப்போர்ட்டில் எழுதப்பட்டது என்பதற்கு இறைவன் சாட்சி ஆவான். மார்க்கங்களின் பிரதிநிதிகள் எழுதியவை, வாசித்தவை பிறகு அதனை ஏற்பாட்டு கமிட்டியினரிடம் ஒப்படைத்த அதே கட்டுரை,அது முற்றிலும் சரியாக அவ்வாறே வெளியிடப்பட்டது. ஆனால் மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவி அவர்களையும் அவர்களின் அறிவையும் பற்றி என்ன சொல்வது, ரிப்போர்ட் வெளியானதும் அவர்கள் தம் பெயரில் அச்சாகிய கட்டுரை உண்மையில் அவர்களுடையது அல்ல என கூச்சலிட ஆரம்பித்துவிட்டார்.

மவ்லவி சாஹிப் இவ்வாறு குற்றம் சுமத்துவதின் நேக்கம் மற்றும் குறிக்கோள்,போட்டியில் தோல்வி அடைந்த இழிவை மறைப்பதற்காகவே என்பது வெளிப்படை ஆகும் . ஆயினும் அவர்களின் இந்த செயல் தேவையற்ற தவறான காரணம் மற்றும் தம் கையால் தம்மீது மண்ணை போட்டுக்கொண்டதாக ஆனது. மேலும் இந்த செயல் ஏற்பாட்டாளர்களிடம் மறைந்தாக இருக்கவில்லை. எனவே மவ்லவி சாஹிபின் இந்த கூச்சல் மற்றும் குற்றச்சாட்டை கவனத்தில் கொள்ளதக்கதாக ஏற்பாட்டாளர்கள் கருதவில்லை.

இவ்வாறு மவ்லவி சாஹிபின் குறை மறைக்கப்படுவதற்கு பகரமாக மேலும் குறை வெளிப்பட்டது , அதனால் மவ்லவி சாஹிப் எரிந்து போன சாம்பலை போன்று ஆனார், இந்த ஆழமான காயத்தினால் நிம்மதி அற்றவரானார், அவர் அதனை ஆற்றுவது சாதியமற்றதாகும் ஏனெனில் மனித திட்டங்கள் அதனை சரி செய்ய அது மனித கரங்களால் ஏற்பட்டதாக இருக்கவில்லை. இவ்வாறில்லை எனில் அவர்களுக்கு எந்த குறையின் குற்றச்சாட்டு இருந்ததோ அது உண்மை என்றால் தனது அசல் கட்டுரையை அச்சிட்டு ஏற்பாட்டாளர்களின் ஏமாற்றை பற்றி உலகிற்கு ஏன் காட்டவில்லை. இவ்வாறான அறிவை கொண்டு அழத்தான் வேண்டும்

(20) சுவாமி ஷோகன் சந்தர் சாஹிப் அவர்களின் மூலம் இறைவன் இந்த மகத்தான உண்மையின் அடையாளத்தை வெளிப்படுத்தும் ஏற்பாட்டை செய்தான். மாநாட்டின் அனைத்து வித வேலைகளின் போதும் பிறகு ரிப்போர்ட்டின் வெளியீடு வரை, சந்தித்த வண்ணமாக வந்து சென்று கொண்டிருந்தார்கள். பிறகு அவர்களுக்கு என்னவானது,அவர்கள் எங்கு சென்றார்கள் என்பது தெரியவில்லை. இறை வல்லமையின் கரங்கள் அவரை இந்த சேவைக்காக காதியான் கொண்டுவந்தது. பிறகு முன்னரைப் போன்றே அவர்கள் மறைந்து காணாமல் போய் விட்டார்கள்.

இப்படிக்கு

அப்துர் ரஹ்மான் காதியானி


……☆……☆……☆……

### திருத்தம்

19 மார்ச் 2020 இதழின் இரண்டாம் பக்கத்தில் திருக்குர்ஆனின் சூரா ஃபாத்திஹாவின் வசனங்கள் முன்னும் பின்னுமாக தவறாக அச்சிடப்பட்டு விட்டது. சரியான திருத்தத்துடன் வசனங்கள் ஆன்லைனில் (akhbarbadrqadian.in) வெளியிடப்பட்டுள்ளது. வாசகர்களிடம் தவறுக்காக வருந்துகின்றோம். (வெளியீட்டுத் துறை)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

### முக்கிய அறிவிப்பு

**ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு கடிதம் எழுதும் அனைத்து ஜமாஅத் சகோதர சகோதரிகளுக்கும் அறிவிக்கப்படுவதாவது: வழக்கம்போல் தங்களின் அனைத்துக் கடிதங்களும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்களுக்கு முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. எனினும் கொரோனா வைரஸ் தொடர்பாக இன்றைய நாட்களில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் கடிதங்களுக்கு பதில் எழுதும் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த அனைத்துக் கடிதங்களுக்கும் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக பதில் அனுப்புவது சாத்தியமில்லை. ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஸில் அஸீஸ் அவர்கள் தங்கள் கடிதங்களை பார்வையிட்டு தங்களுக்காக துஆ செய்கின்றார்கள்.

அல்லாஹ் கருணையும், அருளும் புரிவானாக. இந்தத் தொற்று நோய் மற்றும் ஏனைய சிரமங்கள் மற்றும் பிரச்சனைகள் மற்றும் கஷ்டங்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பானாக. அனைவரையும் தனது பாதுகாப்பிலும் அடைக்கலத்திலும் வைப்பானாக. மேலும் எப்பொழுதும் அவனது அன்பின் பார்வை உங்கள் மீது இருக்கட்டுமாக. (முனீர் அஹ்மது ஜாவீது – தனிச்செயலர்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

கிப்பன் கிறித்தவர்களின் ஒரு புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியராக இருந்தார். அவர் ரோமானியர்களின் நிலைமை தொடர்பாக ஒரு வரலாற்று நூலை எழுதியுள்ளார். அவர் அந்த நூலில் அலிஃப் அர்ஸிலான் அவர்களின் மகனான மலிக் ஷா தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்.

மலிக் ஷா இளைஞராக இருந்த சமயத்தில் அவரது தந்தையார் மரணித்து விட்டார். தந்தையார் மரணமடைந்ததும் மலிக் ஷாவின் சிறிய தகப்பனாரின் மகனும் அவரது ஒன்றுவிட்ட சகோதரரும் மலிக் ஷாவிற்கு எதிராக நாங்கள்தான் அரசாட்சியில் இருப்போம் என்று வாதம் செய்ய ஆரம்பித்தனர். இதன் காரணமாக உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

நிஸாமுத்தீன் தவ்ஸி என்பவர் மலிக் ஷாவின் அமைச்சராக இருந்தார். அவர் (ஷியாவாக இருந்த காரணத்தால்) மலிக் ஷா அவர்களை இமாம் மூஸா ரிழா (ரலி) அவர்களின் கப்ரில் துஆ செய்வதற்காக அவரை அழைத்துச் சென்றார். துஆ செய்த பிறகு மலிக் ஷா தனது அமைச்சரிடம் நீங்கள் என்ன துஆ செய்தீர்கள்? என்று கேட்டார். அதற்கு அமைச்சர், இறைவன் உங்களுக்கு வெற்றியை தர வேண்டும் என பதிலளித்தார். அப்போது மலிக் ஷா இவ்வாறு கூறினார். நான் இறைவனிடம் இவ்வாறு துஆ செய்தேன்.

**என் இறைவா ! எனது சகோதரன் முஸ்லிம்கள் மீது ஆட்சி செய்வதற்கு என்னை விட அதிகமாக தகுதியுடையவனாக இருந்தால் நீ இன்று என்னுடைய உயிரை பறித்து விடு. எனது சிம்மாசனத்தை என்னிடமிருந்து திரும்ப பெற்றுக் கொள்.**

கிப்பன் ஒரு கிறித்தவ வரலாற்று ஆசிரியராக இருந்ததால் முஸ்லிம்கள் மீது மிகவும் காழ்ப்புணர்வு கொண்டவராக இருந்தார். ஆனால் இந்த சம்பவத்தை குறிப்பிட்டு விட்டு தன்னையும் அறியாமல் அவர் இவ்வாறு எழுதுகின்றார்.

**“இந்த துருக்கிய (முஸ்லிம்) இளவரசரின் இந்த கூற்றை விட மிகவும் தூய்மையான விரிவான கண்ணோட்டத்திலுள்ள சொற்களை வரலாற்று ஏடுகளின் பக்கங்களில் தேடுவது கடினமானதாகும்”**

(இஸ்லாம் கா இக்திஸாதி நிஸாம், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 10)

## ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

தொகுதி எண் 5 இதழ் 14–ன் தொடர்ச்சி...

**28 செப்டம்பர் 2019 (சனிக்கிழமை)**

ஹுஸூர் அவர்கள் காலை 6 மணிக்கு மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகைக்கு பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்குச் சென்றார்கள். காலையில் ஹுஸூர் அவர்கள் அலுவலக கடிதங்களை ஆய்வு செய்தார்கள். மேலும் சில வழிகாட்டல்களையும் வழங்கினார்கள். இன்றைய நிகழ்ச்சிக்கேற்ப ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு பெண்கள் மாநாட்டுத் திடலில் இருந்தது.

பெண்களின் மாநாட்டுத் திடலில் காலை 10:40 மணிக்கு ஹஸ்ரத் பேகம் சாஹிபா அவர்களின் தலைமையில் பெண்களின் மாநாடு இனிதே ஆரம்பமானது. இந்த நிகழ்ச்சி 12 மணி வரை இருந்தது. இந்த அமர்வில் திருக்குர்ஆன் ஓதப்பட்டு அதன் மொழியாக்கமும் எடுத்துக் கூறப்பட்டது. மேலும் ஒரு நஸ்மும் இரண்டு சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன. இதில் ஒரு சொற்பொழிவு உருது மொழியிலும், மற்றொரு சொற்பொழிவு டச் மொழியிலும் நிகழ்த்தப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் வருகை தரும் வரை லஜ்னாக்களின் சில உறுப்பினர்கள் சில நஸ்ம்களை படித்தார்கள்.

மதியம் 12:30 மணிக்கு ஹுஸூர் அவர்கள் பெண்கள் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்தார்கள். ஹாலந்தின் சத்ர் லஜ்னா இமாயில்லாஹ் மற்றும் நாஸிமா அஃலா அவர்கள் தமது துணை நாஸிமாத் அஃலா அவர்களுடன் ஹுஸூர் அவர்களை வரவேற்றார்கள். மேலும் பெண்கள் அஹ்லன் வ சஹ்லன் மர்ஹபா என்று கூறியவாறு தமது அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களை வரவேற்றார்கள்.

பிறகு இந்த அமர்வின் துவக்கத்தில் திருக்குர்ஆன் ஓதப்பட்டது. அஸீஸா ரைஹானா வஹ்ஹாப் சாஹிபா திருக்குர்ஆன் ஓதினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை அஸீஸா மாரியா ஹஸன் ஸுபைர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். இதற்குப் பிறகு அஸீஸா சப்பியா அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் இயற்றப்பட்ட, வே பேஷ்வா ஹமாரா ஜிஸ்ஸே ஹே நூர் சாரா என்ற உருது கவிதைகளை படித்தார்கள்.

பிறகு ஹுஸூர் அவர்கள் கல்வியில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்ற 21 மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்கள் மேலும் ஹஸ்ரத் பேகம் சாஹிபா அவர்கள் இந்த மாணவிகளுக்கு மெடலை அணிவித்தார்கள்.

சான்றிழதைப் பெற்ற இந்த நற்பேறு பெற்ற மாணவிகளின் பெயர்கள் இதுவாகும்:

1. நூர் தீன் ரஸா சாஹிபா (MSC Physiys) – பஞ்சாப் பல்கலைக்கழகம், பஞ்சாப்

2. நூர் தீன் ரஸா சாஹிபா (MS Physiys) – பஞ்சாப் பல்கலைக்கழகம், பஞ்சாப்

3. அம்மத்துல் முஜீப் நய்யர் சாஹிபா (MSC Environmental Biology) – நைஜீரியா

4. தானியா சயீது - (Primary Education Board தேர்வில் 98 சதவிகிதம் மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள்)

5. ரோஷ்னீ நயீம் (BSC Microbiology) – ஜின்னா பல்கலைக்கழகம், கராச்சி.

6. மனால் பஷீர் - (Primary Education Board தேர்வில் 100 சதவிகிதம் மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள்)

7. நிஃமானா தாஹிர் - (FSC Pre.Engineering) – நுஸ்ரத் ஜஹான் காலேஜ், ரப்வா

8. ஸுனைரா சவுத்ரி வடாச் (BSC INTERNATIONAL COMMUNICATION & MEDIA) – UTRECHT ஹாலந்து

9. புஷ்ரா பஷாரத் (M.Phil Chemistry) – சர்கோதா பல்கலைக்கழகம், பாகிஸ்தான்

10. உர்வாஜ் கிரல் (BSC) – Geneeskunde ERAMUS பல்கலைக்கழகம்

11. நாயிலா நிலோஃபர் ஹபீழ் (MSC) – Tandheelkunde VRIGE பல்கலைக்கழகம்

12. ஸில்ஹிமா அப்பாஸி (FSC Pre.Engineering) – ஃபைஸிலாபாத், பாகிஸ்தான்

13. இம்ரா மேரி (MSC) – Geneeskunde பல்கலைக்கழகம் Van Maatricht

14. ஃபாயிக்கா அஹ்மது (Bsc Civil Engineering) – UAE UNIVERSITY

15. தய்யிபா (Bsc zychology) – சர்கோதா பல்கலைக்கழகம், பாகிஸ்தான்

16. EIMNE RUSTEMI (Primary Education Board தேர்வில் 100 சதவிகிதம் மதிப்பெண்களைப் பெறுள்ளார்கள்)

17. ஷாஃபியா மஹ்மூது (5 A Star) – பிரஸன்ட் ஸ்கூல், லாஹூர்

18. மாரியா சவுத்ரி (Bsc zoology) – பஞ்சாப் பல்கலைக்கழகம், லாஹூர்

19. அதீலா நதீம் சவுத்ரி (Bsc Exercise and Health) – கோர்கிரி பல்கலைக்கழகம், கனடா

20. நஸ்ரீன் Sahebali (UA) – Leiden பல்கலைக்கழகம்

21. ரூயத்துன் நூர் Compier (Exceptional Performance Primary Education)

கல்விக்கான சான்றிதழ் வழங்கும் இந்நிகழ்ச்சிக்குப் பிறகு 12:50 மணிக்கு ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

(உருது பத்ர், 24,31 அக்டோபர் 2019 – தொடரும்...)

### திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ் நேர்வழிகாட்ட நாடுகின்றவருடைய உள்ளத்தை இஸ்லாத்தி(னை ஏற்பத)ற்காக திறக்கிறான். மேலும் வழி தவறச் செய்ய நாடுகின்றவருடைய உள்ளத்தை வானத்தில் ஏறிச் செல்கின்றவதப் போன்று மிகவும் குறுகச் செய்கின்றான். இவ்வாறே அல்லாஹ் நம்பிக்கை கொள்ளாதவர் மீது தண்டனையை இறக்குகின்றான். (6:126)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 23 April 2020 Issue No. 17

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## சர்வ சமய மாநாடு – லாஹூரில் நடைபெற்ற மாநாட்டில் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய கண்கள் கண்ட காட்சிகள்

ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் சாஹிப் காதியானி (ரலி) அவர்களின் எழுத்துக்களிலிருந்து....

(தமிழாக்கம்: முஅல்லிம் M. ஷாஜஹான்)

குறிப்பு: கடந்த 19 மார்ச் 2020 இதழில் வெளிவந்த இக்கட்டுரையின் மற்றொரு பகுதி தற்போது வெளியிடப்படுகிறது.

(11) சையதுனா ஹஸ்ரத் அக்தஸ் அவர்களுடைய கட்டுரையின் அசல் பகுதியை காஜா சாஹிப் தம்முடன் லாஹூர் கொண்டு வந்தார்கள் அதனையும் திருக்குர்ஆனின் வசனங்களையும் வாசிப்பதின் பயிற்சியை மேற்கொண்டு வந்தார்கள் என்பதை நான் கேட்டும் , பார்த்தும் உள்ளேன், காஜா சாஹிப் லாஹூர் வந்த பிறகு கட்டுரையின் எந்தெந்த பகுதிகள் தயாராகுமோ அதன் நகல் அவருக்கு லாஹூர் அனுப்பி வைக்கப்பட்டு வந்தது, இந்த நிகழ்வு 25 டிசம்பர் 1896 மாலை வரை அல்லது 26 டிசம்பர் இரவு வரை தொடந்தது.

(12) இறைவன் அருளால் மாநாடு நடைபெற்றது. சிறந்த இடத்தில், சிறப்பான ஏற்பாட்டின் கீழ் நடந்தது, மேலும் உண்மையிலேயே கடும் எதிர்ப்பின் சூறாவளி மற்றும் கடும் சிரமங்கள் மற்றும் ஆபத்தான படுகுழிகளை கடந்த பின்னர், பெரும் பெரும் தடைகள் போடப்பட்டிருந்தன, விதவிதமான ஏமாற்று மற்றும் நுட்பத்திலும் நுட்பமான தந்திரங்கள் கையாளப்பட்டன ஆனால் இறுதியில் இந்து மற்றும் யூதர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்களின் கைபர் கோட்டை தகர்ந்தது, இறைவனின் இல்ஹாமில் கூறப்பட்டதே நடத்தேறியது.

அல்லாஹு அக்பர் கபத் கைபர் என்பதில் கூறப்பட்டிருந்ததே நடந்தது. எதிரிகள் டவுண் ஹாலை எடுக்கவிடவில்லை எனும் போது இறைவன் அதனை விட சிறந்த இடத்திற்கான ஏற்பாட்டினை செய்துவிட்டான். இஸ்லாமிய உயர்நிலை பள்ளியின் உற்புறம் ஷீரான்வாலா வாயிலின் பரந்த இரண்டடுக்கு கட்டிடம், நீள அகலமான முற்றம், பெரிய அறைகள், ஹால் மற்றும் கேலரிகள் அனைத்தையும் கொண்ட ஒரு மிகமகத்தான கட்டிடம், பெரிய இஜ்திமாவிற்கு போதுமான சிறந்த இடமாக இருந்த அதனை இறைவன் வழங்கிவிட்டான். டிசம்பர் 26 மாநாட்டின் முதல் நாள் ஆகும், திருப்திகரமான வருகையாளர் வந்திருந்தனர். சையிதுனா ஹஸ்ரத் மஸீஹ் அவர்களின் (மீது ஆயிரம் ஆயிரம் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக).

கட்டுரைக்காக 27 டிசம்பர் அன்று மதியம் ஒன்றரை மணிக்கு என முடிவு செய்யப்பட்டு இருந்தது. இறைவனின் ஆச்சரியமான வல்லமை மற்றும் அவனின் சிறப்பான அருளின் விளைவால் ஹஸ்ரத் மவ்லானா மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் அன்பும் நேசமும் நிறைந்த துடிப்புடன் குறிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னர் லாஹூர் வந்துசேர்ந்தார்கள், அவர்களின் வருகையால் எங்களுக்கு நிம்மதி மற்றும் மகிழ்ச்சியின் ஏற்பட்டை இறைவன் செய்துதந்தான்.

(13) சூழ்நிலைகள் தகுந்தாக இருக்கவில்லை, எதிர்ப்புகள் சூடுபிடித்தும், விதவிதமான சிரமங்கள், காலகட்டமும் தகுந்ததாக இல்லாததினால் ஆபத்து இருந்தது , மேலும் ஒருவேளை மாநாடு உள்ளம் விரும்பியவாறு விமர்சையாக இருக்காதோ என்ற கவலை சூழ்ந்திருந்தது ஆனால் இறைவனின் மகிமையால் இறைமக்கள் எவ்வாறு ஈர்க்கப்பட்டு கொண்டு வரப்பட்டனர் என்றால் வானவர்களின் படை அவர்களை தள்ளிக்கொண்டு வந்ததை போன்று இருந்தது, அவர்களின் தூண்டுதலினால் எந்தளவுக்கு தாக்கம் ஏற்பட்டதென்றால் படைப்பினங்களின் உள்ளம் மாறிவிட்டது மேலும் அவர்களின் உள்ளத்தில் கிளர்ச்சி மற்றும் வெறுப்பிற்கு பதிலாக அன்பும் நேசமும் நிரம்பி இருந்தது.

எதிரிகளின் எதிர்ப்பு உரத்தின் வேலையை செய்தது குழப்பவாதிகளின் தடை முயற்சிகள் மக்களின் கவனத்தை மாநாட்டின் பக்கம் திசை திருப்பியது அதனால் மக்கள் கூட்டம் கூட்டமாக வேகநடையுடன் மாநாட்டின் திடலுக்கு வந்த வண்ணமாக இருந்தனர். இதனால் இறுதியில் முற்றம் மற்றும் அதனை சுற்றியுள்ள அறைகள் ஹால் நிரம்பும் நிலை ஏற்பட்டது. மேலே இருந்த கேலரியில் அசையக்கூட இடம் இருக்கவில்லை, கூட்டம் எந்தளவுக்கு அதிகமானது எனில் வந்தவர்களுக்கு இடம் தர அனைவரையும் நெருக்கமாக்க வேண்டியது வந்தது. டிசம்பர் விடுமுறையின் காரணமாக பல இடங்களில் மாநாடு, கான்ஃபரன்ஸ் மற்றும் கூட்டங்கள் நடை பெற்று வந்தன.

உலக வேலைகளில் ஈடுபாடு மற்றும் அதன் பயன்களை பெறுவது போன்ற மக்களின் வேலைகளுக்கு மத்தியில் முற்றிலும் மார்க்கம் தொடர்பான ஒரு மாநாடு மற்றும் கான்ஃபரன்ஸில் இந்தளவுக்கு அதிகமான கூட்டத்தை கண்ட ஒவ்வொரு பெரியவர் சிறியவர் அதன் தாக்கத்திற்குள்ளாகி இந்த எண்ணிக்கையின் வெற்றி அசாதாரணமானது, சிறப்பான இறைதிட்ட தாக்கத்தின் விளைவு எனக்கூறும் கட்டாயத்திற்கு உள்ளானார்கள்.

இந்த விசயத்தில் ஒரு இந்துவுக்கும் மாற்றுக் கருத்து இருக்கவில்லை, சீக்கியருக்கும் இருக்கவில்லை. ஆரிய சமாஜினருக்கும் இருக்கவில்லை. முஸ்லிம்களுக்கும் இதில் கருத்து வேறுபாடு இருக்கவில்லை, கிருத்துவர்களுக்கும், யூதர்களுக்கும், தேவ சமாஜினருக்கும் மாறாக ஒவ்வொரு பிரிவினர்கள் மற்றும் படித்தரத்தின் அனைத்து மக்களும் இன்று, வழக்கத்திற்கு மாற்றமான ஈர்ப்பு மற்றும் எங்கும் கண்டிராத இழுப்பின் தாக்கத்திற்குள்ளாகி, அவர்களின் உள்ளம் உண்மையிலேயே ஈர்க்கப்பட்டு மென்மையாகி இருந்தது. பார்ப்பதிலும் கேட்பதிலும் வித்தியாசம் உள்ளது இந்த நிகழ்ச்சியின் காட்சிகளை வார்த்தையில் கூறுவது சாத்தியம் இல்லை. சுருக்கமாக அந்த இஜ்திமா தனது சூழலை பொருத்த வரை நிச்சயமாக மிகமகத்தானதாகும், எங்கும் காண இயலாத சந்தேகமின்றி அசாதாரணமானதாக இருந்தது.

(14) கட்டுரை வாசிக்கத்தொடங்கியதும் மக்கள் இன்பம் காணலானார்கள் மேலும் அவர்களின் நாவுகளில் சுப்ஹானல்லாஹ்!

(தொடர்ச்சி 8 வது பக்கம்...)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad